1984 பிப்ரவரி 23]

ஒரு மருந்து கண்டுபிடிக்கக்கூடாதா ? விவசாயிகள் இதனால் அதிக நஷ்டம் அடைந்து இருப்பதால், பயிர்ப்பாதுகாப்பு இன்ஷூரன்ஸ் திட்டத்தின்கீழ் இவைகளைக் கொண்டுவந்து பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் அளிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே அவர்களுக்கு உதவி செய்வதற்குத்தான் நாம் புதிய வாழைக் கன்றுகளை தர இருக்கிறோம்.

1982 ம் வருடம் பெரியகுளம் நாடாளுமன்றத் தொகுதியில் குடி நீருக்காக போடப்பட்ட கைப்பம்புகள்.

145 *வினா 16463 திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

குடி தண்ணீருக்காக பெரியகுளம் நாடாளுமன்றத் தொகுதியில் 1982 ஆம் வருடம் ஆகஸ்ட், செப்டம்பர் மாதங்களில் புதிதாகப் போடப்பட்ட கைப்பம்புகள் (Hand pumps) எத்தனை ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : 469.

(முற்பகல் 9–50)

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவர் அவர்களே, இந்தப் பெரியகுளம் நாடாளுமன்றத் தொகுதியில் இதற்கு முன்னால் போடப்பட்டிருந்த கைப்பம்புகள் எத்தனை? மாண்புமிகு அமைச்சரவர்கள் ஒரு கணக்கை இங்கே சொல்லியிருக்கிறார்கள். அவை எந்த எந்த வகைகளிலே போடப்பட்டவை ? எந்த எந்த காலகட்டத்தில் போடப்பட்டவை ? நான் இரண்டு மாதங்களுக்கு போடப்பட்ட எண்ணிக்கையைத்தான் கேட்டிருக்கிறேன். அந்த இரண்டு மாதங்களில் இவ்வளவு போடப்பட்டிருக்கின்றனவா ? அல்லது வேறு எங்காவது போடப்பட்டவையும் இந்தக் கணக்கிலே சேர்க்கப்பட்டிருக்கிறதா ? ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதி வாரியாக எத்தனை இந்த காலகட்டத்திற்குள் போடப்பட்டன ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; 234 சட்டமன்றத் தொகுதிக்கும் இப்பொழுது எப்படி புள்ளிவிவரம் கொடுக்க முடியும் ?

திரு. என். எஸ். வி. சித்தன் : இந்த விவரங்கள் கிடைக்கும் என்று கருதிதான் இந்தக் கேள்வியைப் போட்டிருக்கிறேன். பொருத்தமுடைய கேள்வி, பதில் வைத்திருப்பார்கள்.

மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்விக்குத்தான் பதில் சொன்னேன், 469 என்று. இவை கிராமக் குடிநீர் திட்டத்திற்காக வறட்சி நிவாரணப் பணியின்கீழ் போடப்பட்டவைதான்.

[1984 பிப்ரவரி 23

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவரவர்களே, என்னுடைய கேள்வியின் நோக்கமே அந்தப் பகுதியில் இந்தக் குறிப்பிட்ட கால கட்டத்தில் நிறைய அடிக் குழாய்கள் போடப்பட்டிருப்பது தான். அப்படிப் போடவேண்டாமென்று சொல்கிறவனல்ல நான். போட வேண்டியதுதான். ஆனால், அதே வேகமும் உற்சாகமும் ஏனைய பகுதிகளிலும் காட்டப்பட வேண்டும் என்ற நோக்கத்தில்தான் நான் கேட்டிருக்கிறேன். மாண்புமிகு அமைச்சரவர்கள் இவை வறட்சி நிவாரணப் பணியின்கீழ் போடப் பட்டவை என்று சொன்னார்கள். வேறு ஏதாவது திட்டத்தின் கீழ் அங்கே குழாய்கள் போடப்பட்டிருக்கின்றனவா ? பெரிய குளம் நாடாளுமன்ற இடைத் தேர்தல் வந்த நேரத்தில் 100 அடி, 150 அடி தூரத்தில் கூட குழாய்கள் போட்டிருக்கிறார்கள். ஒரே ஊரில் 2, 3 இடங்களிலேகூட போட்டிருக்கிறார்கள. இந்த வேகமும் உற்சாகமும் மற்றப் பகுதிகளிலும் காட்டப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவரவர்களே, வறட்சி நிவாரணப் பணியின்கீழ் சென்ற ஆண்டு மட்டும் 22,000—க்கு மேற்பட்ட குழாய்க் கிணறுகளை 46 கோடி ரூபாய் செலவில் போட்டிருக்கிறோம். மக்களுடைய கோரிக்கை, சட்டமன்ற உறுப்பினர்களுடைய விண்ணப்பம், பிரஷர் அவ்வப்போது அமைச்சரிடம் சொல்லக்கூடிய விண்ணப்பம்—இவைகளை எல்லாம் பார்த்து தமிழ்நாடு பூராவும் சீராக எங்கெங்கே அவசரமோ அவசியமோ அங்கங்கே போடுகிறோம்.

திரு. வே. இரா. ஜெயராமன் : தலைவரவர்களே, பெரிய குளம் நாடாளுமன்றத் தொகுதியில் தேவையான கைப்பம்புகள் போடப்பட்டிருக்கின்றனவா ? மேலும் சில கைப்பம்புகள் போட ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே நான் ஏற்கெனவே சொன்னேன். கோரிக்கை வந்து, பிரஷர் ஜாஸ்தியாக வந்து, அங்கே இருக்கின்ற மக்கள் தேவை என்று சொல்லி, அமைச்சருக்கு விண்ணப்பம் வந்து, அது பரிசீலிக்க பட்டு, 'வாட்டர் போர்டு சேர்மேன்' ஆம், போடலாம் என்று சொன்னால் போடலாம்.

சென்னை கொத்தவால் சாவடியை வேறிடத்திற்கு மாற்றும் திட்டம்.

*146—*வினா 17173* திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை கொத்தவால் சாவடியை வேறிடத்துக்கு மாற்றும் செயற் குறிப்பு எந்த நிலையில் உள்ளது ?